**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 12 September 2022

# புதிய வானிலையியல், பருவநிலை அறிவியல் பாடம்



சிங்கப்பூரில் வானிலையியலில் ஆர்வம் ஏற்பட்ட ஒருவர் எடுத்த இந்தப் படத்தில் மின்னல் பதிவானது.

**கோப்புப் படம்: ஜோனதன் ஹோ**

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் புதிய வானிலையியல், பருவநிலை அறிவியல் பாடம் ஒன்றை வழங்க வுள்ளது. இது, பட்டக் கல்விப் பாடத் திட்டத்தில் ‘மைனர்’ எனப் படும் ஓர் அங்கமாக வழங்கப்படும் பாடமாக இருக்கும்.

முதன்முறையாக இத்தகைய பாடம் சிங்கப்பூரில் வழங்கப்படவுள் ளது. சவாலாக இருக்கக்கூடிய வானிலையியல், பருவநிலை துறைக்கு மாணவர்களை அறி முகப்படுத்தும் என்று தேசிய பல்க லைக்கழகமும் ‘எம்எஸ்எஸ்’ எனும் சிங்கப்பூர் வானிலையியல் சேவை யும் தெரிவித்தன.

கூடுதலானோர் வானிலை, பருவநிலை அறிவியலாளர்களாக உருவெடுக்க வகைசெய்வது பாடத் தின் இலக்கு.

வானிலையியல் நிபுணர்க ளாகவோ பருவநிலை விஞ்ஞானிக ளாகவோ வேலை செய்ய விரும் புவோர் இதைத் தாண்டி முதுகலைப் பட்டக் கல்வி மேற்கொள்ளவேண் டும்.

நீடித்த நிலைத்தன்மை ஆலோச கர்கள், மறுபயனீட்டு எரிசக்தி வல் லுநர்கள் போன்ற வேலைகளைச் செய்ய விரும்புவோருக்கு இந்தப் பாடம் உதவும்.

புதிய பாடம் தேசிய பல்கலைக் கழகத்தின் அறிவியல் பள்ளியில் இருக்கும் இயற்பியல் பிரிவின்கீழ் வழங்கப்படும். பல்கலைக்கழகத் தின் மானுடவியல், அறிவியல் பள் ளியைச் சேர்ந்த எல்லா மாணவர் களும் புதிய பாடத்தைப் பயிலலாம்.

புதிய பாடம் எப்போது தொடங் கப்படும் என்பது நிர்ணயிக்கப்பட வில்லை. பருவநிலை அறிவியல் துறையில் வேலைகளுக்கு சிங்கப் பூர் தற்போது வெளிநாட்டினரை அதிகம் சார்ந்துள்ளது. இத்துறைக் குக் கூடுதலான சிங்கப்பூரர்களைச் சேர்க்க புதிய வானிலையியல், பருவநிலை அறிவியல் பாடம் கைகொடுக்கும் என்று தேசிய பல் கலைக்கழகம் அதன் இணையத் தளத்தில் குறிப்பிட்டது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.